**கவனிக்க.**-2021.07.02 ஆந் திகதிய 2235 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) மற்றும் IV(ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2236 - 2021 ජූලි මස 09 වැනි සිකුරාදා - 2021.07.09
*2236 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1426 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1427 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1430 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1425- B 082247 - 405 (2021/07)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்.

சம்மாந்துறைநீதிவான் நீதிமன்றவழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டபின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.07.17ஆந் திகதிகாலை 09.00மணிக்கு சம்மாந்துறைநீதிவான் நீதிமன்றவழாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றையதினம் காலை 08.00 மணிமுதல் 09.00 மணிவரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிடமுடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கானஅதிகாரம் இந் நீதமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனையில் பங்குபற்றவிரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப் படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமூகமளித்தல் வேண்டும்.

ஐ. என். ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை.
2021.07.06.

ஏலவிற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்.

| தொ. இல | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 18170/PC/17 | 97-5527 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 2 | 16365/PC/16 | 144-9066 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 3 | 7959/PC/13 | 147-2352 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 4 | 25964/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 5 | 25622/Misc/21 | | இரும்பு வாளி | 02 |
| 6 | 25683/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 7 | 25683/Misc/21 | | சவள் | 01 |
| 8 | 25624/Misc/21 | | இரும்பு வாளி | 01 |
| 9 | 25624/Misc/21 | | சவள் | 01 |
| 10 | 26016/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 02 |
| 11 | 26017/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 03 |
| 12 | 26018/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 03 |
| 13 | 25778/PHI/21 | | அலுமீனிய கேக் தட்டம் | 05 |
| 14 | 24299/E/20 | | அலுமீனிய சட்டி | 01 |

| தொ. இல | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 15 | 20852/PC/18 | | மண்வெட்டி | 01 |
| 16 | 20852/PC/18 | | சுத்தியல் | 01 |
| 17 | 20852/PC/18 | | குறடு | 01 |
| 18 | No Number | | இரும்பு கேக் தட்டம் | 06 |
| 19 | No Number | | அலுமீனிய சட்டி | 01 |
| 20 | | | ஆற்று மணல் | 16 Cube |

7- 363

## ஆய விற்பனையும் குத்தகையும்

### திருகோணமலை மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2021/2022

(2021, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2022, யூன் 30 ஆந் திகதி வரை )

1.2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், திருகோணமலை பிரதேச செயலாளர் பணிமனையிலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப் பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய ............................ கள்ளுத்தவறணைக் கான விலைக்கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகிய வற்றையும் குறிப்பிட்டு 2021.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2021.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2021.07.19 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2021.07.22 ஆந் திகதி மு.ப.10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. இது தொடர்பாக மேலதிக விபரங்களை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

பொ. தனேஸ்வரன்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
திருகோணமலை பட்டினமும் சூழலும் ,
2021.07.03

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டார இல. - 1 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |
| 2. | தெக்கலூத்து | தெக்கலூத்து இல.-03 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 1,500.00 | ரூபா 1,000.00 |

7 – 319

---

**திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2021/2022**

(2021, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2022, யூன் 30 ஆந் திகதி வரை )

2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2022, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும்

முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக்குறைந் தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய . நிலாவெளி கள்ளுத்தவறணைக்கான விலைக் கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2021.07.19 ஆந் திகதி பி. ப. 01.00 மணிக்கு குச்சவெளி பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் குச்சவெளி பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2021.07.19 ஆந் திகதி பி. ப. 01.00 மணிக்கு விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்களும் அல்லது அவர்களின் தரகர்கள் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற் பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2021.07.19 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2020.07.22 ஆந் திகதி பி.ப. 01.00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி தவறணை தற்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப் படலாம்.

9. இது தொடர்பாக மேலதிக விபரங்களை குச்சவெளி பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யூ. எம். பாதிய விஜயந்த,
பிரதேச செயலாளர் (பதிற் கடமை).

பிரதேச செயலகம்,
குச்சவெளி,
2021.07.05.

**அட்டவணை**

| இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குச்சவெளி | நிலாவெளி இல. 4 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |

7- 328

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## மெட்ரோபொலிட்டன் அட்வான்ஸ்ட் டெக்னோலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட்டு கம்பனி அமைப்பு அகவிதிகளின் 14(2) ஆம் உறுப்புரைக்கமைவாகவும் 8,709,284 சாதாரண வாக்குரிமை பங்குகளாலும் 51,377,127 சாதாரண வாக்குரிமையற்ற பங்குளாலும் பிரதிநிதிப்படுத்தப்படும் கம்பனியின் கூறப்பட்ட மூலதனமான அறுநூறு மில்லியன் எட்டு இலட்சத்து அறுபத்தி நான்கு ஆயிரத்து நூற்று பத்து ரூபா (600, 864,110) ஆனது நூற்று எழுபத்தெட்டு மில்லியன் ஒரு இலட்சத்து தொன்னூற்றி நான்கு ஆயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபாவாக (178,194,112) கம்பனியின் தற்போதுள்ள பங்குகளிற்கு எவ்வித மாற்றமுமின்றி குறைக்கப்படுமென இக்கம்பனியின் பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு மெட்ரோபொலிட்டன் அட்வான்ஸ்ட் டெக்னோலொஜீஸ் ( பிரைவட்) லிமிட்டட் இனால் முன்மொழியப்பட்டுள்ளதென இக்கம்பனியின் பணிப்பாளர் சபையானது இத்தால் அறிவித்தல் வழங்குகின்றது.

மேற்கூறப்பட்ட குறைப்பானது 2021, மாச்சு 31 ஆந் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்படாத கணக்கிடல் கூற்றில் பிரதிபலிக்கப்பட்டுள்ள கம்பனியின் ஒன்று சேர்க்கப்பட்ட நட்டமான நானூற்றி இருபத்தியிரண்டு கோடியே அறுநூற்றி அறுபத்தொன்பது இலட்சத்து தொள்ளாயிரத்து தொன்னூற்றி எட்டு ரூபாவை (422,669, 998) எதிரீடு செய்வதன் மூலம் செயல்முறைப்படுத்தப்படும்.

உத்தேசிக்கப்பட்ட கூறப்பட்ட மூலதன குறைப்பிற்காக விஷேட முன்மொழிவொன்றின் மூலம் பங்குதாரர்களின் அனுமதியை பெறும் நோக்கத்துடன் கம்பனியின் அதிவிஷேட பொதுக் கூட்டமொன்று கூட்டப்படும்.

மெட்ரோபொலிட்டன் அட்வான்ஸ்ட்
டெக்னோலொஜீஸ் ( பிரைவட்)
லிமிட்டட்.

லசன்தி அபேயகூன்,
கம்பனிச் செயலாளர்கள்.

பி டபிள்யூ கோப்பரேட் செக்கிரடேரியல்
( பீவீடி) லிமிட்டட்.
2021, யூன் 25.

7- 129

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிப்பு செய்யப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: எச்ட் லங்கா (தனியார்) நிறுவனம்
கம்பனி பதிவு இலக்கம்: பிவி 00240246
பதிவுத் திகதி: 2021, யூன் 01
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10/29, இடம மாவத்தை, விஜயகுமாரணதுங்க மாவத்தை, கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திகா ஷிரோமணி சேதர
ஹெட்டிகே.
கம்பனிச் செயலாளர்.

7-190

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முறுதலாவை 05 ஆவது அஞ்சல் இடுகை "பண்டார நிவஸ" இலக்கம் 231 எனும் முகவரியில் வசிக்கும் சேனாநாயக்க ராஜபக்ச வாசல ஹிடிராலஹாமிலாகே ஸ்ரீயாரத்ன பண்டார (தே.அ.அ. இலக்கம் 58245307 V) ஆகிய நான், என்னால் மூனமல்தெனிய, மூனமல்தெனிய அஞ்சல், கடவலகெதர எனும் முகவரியில் வசிக்கும் பதிராஜ முதியன்சேலாகே தமரா தமயந்தி மணிக்கே பதிராஜ (தே.அ.அ.இல. 695372914V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2014.04.10 ஆந் திகதி வெல்பல்லவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு அமரபாலி பின்னவல அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 134 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சேனாநாயக்க ராஜபக்ச
வாசல ஹிடிராலஹாமிலாகே
ஸ்ரீயாரத்ன பண்டார .

2021, யூன் 23.

7- 181

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தென் கொரியாவில் (Chungnam -Do, Dangiin -Si, Myeong,Sinpyng. Sinpyong Kil.225- 132. Sungin Corporation எனும் முகவரியில தொழில் புரிந்த மற்றும் தற்போது மாத்தறை, பொல்ஹேன, காசிவத்தபுர, இல. 32 எனும் முகவரியில் வசிக்கும் இலந்தாரி புரகே ரங்கன தில்ஹான் (தே.அ.அ.இல. 862594576V) ஆகிய நான்,

மொரவக, கொடிகாரகொட, "ஜயமின" எனும் முகவரியில் வசிக்கும் திருமதி பட்டகொடகே சஞ்சலா ஆஷிங்கா (தே.அ.அ. இல. 948212862V) என்பவருக்கு தென் கொரியாவின் இலங்கை தூதுவராலயத்தின் திருமதி நயோமி சேரசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2019.11.23 ஆந் திகதிய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2021.0623 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலந்தாரி புரகே ரங்கன தில்ஹான் .

7- 311

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தல, மாம்பே விஷ்வகலா வீதி, இல. 130/ 10/ B எனும் முகவரியில் வசிக்கும் பொரகன்னா கெதர நிஹால் சிரிவங்ஷ (தே.அ.அ.491682982V) என்பவரால் காலி, சீனகொரட்டுவ, ஸ்ரீ தேவாமித்த மாவத்தை, இல. 10 எனும் முகவரியில் வசிக்கும் முனசிங்ஹ பதிரன பல்லியகே தீக்ஷன நவீன் மதுசங்க (தே.அ.அ.இல. 873522062V) என்பவருக்கு, பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ. பந்துல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2019.09.06 ஆந் திகதி 1510 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2019.09.10 ஆந் திகதி காலஞ்சென்ற அற்றோணி அதிபதியின் சட்டபூர்வ உரிமையாளர் ஜாசிங் ஆரச்சிகே சந்தி சுபோதிகா (தே.அ.அ.இல. 688162777V) ஆகிய என்னால் (சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு அஷோக தர்மரத்னவின் 2021.01.28 ஆந் திகதிய 274 ஆம் இலக்க Probate சான்றிதழுக்கு இணங்க) இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஜாசிங் ஆரச்சிகே சந்தி சுபோதிகா
(தே.அ.அ.இல. 688162777V)
காலஞ்சென்ற அற்றோணி அதிபதியின்
சட்டபூர்வ உரிமையாளர் மற்றும் சொத்துக்கு
Probate உரித்தாளி.

7- 410/1

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 42, பூர்வாராம வீதி, கொழும்பு 05, என்னும் முகவரியில் இயங்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட PV 74748 ஆம் இலக்க COLLETTES ENTERPRISES CLEANING SERVICE (PRIVATE) LIMITED என்னும் கம்பனியால் பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ. பந்துல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2019.09.06 ஆந் திகதி 1510 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் காலி, சீனகொரட்டுவ, ஸ்ரீ தேவாமித்த மாவத்தை, இல. 10 எனும் முகவரியில் வசிக்கும் முனசிங்ஹ பதிரன பல்லியகே தீக்ஷன நவீன் மதுசங்க (தே.அ.அ.இல. 8735522062V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் COLLETTES ENTERPRISES CLEANING SERVICE (PRIVATE) LIMITED கம்பனியின் தலைவர், பணிப்பாளர் மற்றும் தற்போதைய உரிமையாளர் ஜாசிங் ஆரச்சிகே சந்தி சுபோதிகா (தே.அ.அ.இல. 688162777V) ஆகிய என்னால் (சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு அஷோக தர்மரத்னவின் 2021.01.28 ஆந் திகதிய 274 ஆம் இலக்க Probate சான்றிதழுக்கு இணங்க) இத்தால் இரத்துத் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

ஜாசிங் ஆரச்சிகே சந்தி சுபோதிகா
(தே.அ.அ.இல. 688162777V).

COLLETTES ENTERPRISES
CLEANING SERVICE (PRIVATE) LIMITED
கம்பனியின் தலைவர், பணிப்பாளர் மற்றும்
தற்போது உரித்து Probate உரித்தாளி.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், கூட்டிணைக் கப்பட்ட அலுவலகம் இயங்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் COLLETTES ENTERPRISES CLEANING SERVICE (PRIVATE) LIMITED கூட்டிணைக் கப்பட்ட இல. PV 74748 )ஆகிய கம்பனி

7- 410/2